ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி

வியாழக்கிழமை, 6 ஆகஸ்ட் 2026

ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

300 குறள்களை ஒப்பிக்கும் மாணவர்களுக்கு ரூ.5,000

சென்னை, ஆக. 5: 300 திருக்குறள்களை ஒப்பிக்கும் பள்ளி மாணவர்களுக்கு ரூ.5,000 ஊக்கத் தொகை வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து தமிழக பட்ஜெட்டில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ் மொழி, இலக்கியத்தின் மீது இளம் வயதிலேயே பற்றுணர்வை வளர்க்கும் நோக்கில் 300 திருக்குறள்களை மனனம் செய்து ஒப்பிக்கும் 500 தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு தலா ரூ.5,000 ஊக்கத் தொகையை அரசு வழங்கும். தமிழ் மொழித் தியாகிகளின் ஒப்பற்ற பங்களிப்பை நினைவுகூரும் வகையில் கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரை, பேச்சுப் போட்டிகளை அரசு தொடர்ந்து நடத்தும்.

காயிதே மில்லத் வரலாற்றுப் பெருமையைப் போற்றும் வகையிலும், தமிழ் மொழி மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றைக் கொண்டாடும் வகையிலும் ஒரு புதிய விருது ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்று காயிதே மில்லத் நினைவாக வழங்கப்படும்.

தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் தமிழ்ப் பெருந்திரள் மொழி மாதிரி (எல்எல்எம்) உருவாக்குதல், அரசின் அதிகாரபூர்வ தொடர்புகளை செயற்கை நுண்ணறிவு சார்ந்த மொழித் தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு செயல்படுத்துதல் மற்றும் முன்னணி பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தமிழுக்கென பிரத்யேகமான செயற்கை நுண்ணறிவு மாதிரி உருவாக்குதல் ஆகியவை முன்னெடுக்கப்படும்.

பள்ளி மாணவர்களுக்கு தொல்லியல் தலங்கள், உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்காக அரசு ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.5 லட்சம் முதலீட்டு மானியம்

சென்னை, ஆக. 5: 'சிங்கப் பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம்' மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களை குறுந்தொழில் நிறுவனங்களாக மாற்ற ரூ.5 லட்சம் வரை முதலீட்டு மானியம் மற்றும் கடனுதவி வழங்கப்படவுள்ளது என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு:

தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல ஆண்டுகளாக வளர்ச்சி பெற்று சிறந்த நிலையை அடைந்துள்ளன. இருப்பினும், இனி வருங்காலங்களில் சுய உதவிக் குழுக்களை குறுந்தொழில் நிறுவனங்களாக அடுத்தகட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலைக்கு உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, 'சிங்கப் பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அரசு தொடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் நிலையான தொழில்முனைவோரின் செயல்திறனை வெளிப்படுத்தும் ஒவ்வொரு சுய உதவிக் குழு நிறுவனங்களுக்கும் ரூ.5 லட்சம் முதலீட்டு மானியம் வழங்கப்படும். மேலும் இந்த ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.38,000 கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோவை– அரியலூர் இடையே ரூ.4,000 கோடியில் மின்பகிர்மான பாதைத் திட்டம் செயல்படுத்தப்படும்

சென்னை, ஆக. 5: கோவை, அரியலூர் இடையே ரூ.4,000 கோடியில் மின்பகிர்மான பாதை திட்டம் செயல்படுத்தப்படும் என பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்துக்கு 2,640 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறனை வழங்கக்கூடிய உடன்குடி நிலை-1 மற்றும் எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. சுமார் ரூ.8,000 கோடியில் இடிபிஎஸ் விரிவாக்கத் திட்டம் அரசு, தனியார் கூட்டாண்மை முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரூ.5,050 கோடியில் வெள்ளிமலை நீரேற்று புனல் மின் தேவையை நிர்வகிப்பதில் மின்கல ஆற்றல் அமைப்புகளின் (பெஸ்) முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள இந்த அரசு இந்தத் துறையில் தனியார் முதலீடுகளை எளிதாக்கி, தமிழகத்தை இந்தியாவின் 'பெஸ்' மையமாக மாற்றும் வகையில் புதிய 'பெஸ்' ஊக்குவிப்புக் கொள்கையை வெளியிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூ.1 லட்சம் வரை மானியம்... பிரதமர் சூரியசக்தி வீடு இலவச மின்சாரத் திட்டத்துடன் இணைந்து 'புதிய வீட்டுக் கூரை சூரிய மின் மானியத் திட்டம்' அறிமுகப்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் சூரிய மின்பலகைகள் பொருத்தும் வீட்டு நுகர்வோருக்கு ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சென்னை மாநகரில் உள்ள அனைத்து நுகர்வோருக்கும், மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள 50 லட்சம் தொழில் மற்றும் வணிக நுகர்வோருக்கும் 'ஸ்மார்ட் மீட்டர்கள்' அமைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்.

வரும் 2035–2036ஆம் ஆண்டுக்குள் அதிகபட்ச மின் தேவையின் அளவு 37,000 மெகாவாட்டைக் கடக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மின் உற்பத்தி, விநியோகம் மற்றும் பகிர்மானத்தில் முதலீடுகளை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்தக் கூடிய மிக முக்கியத் திட்டமாக கோயம்புத்தூர்–அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மானப் பாதைத் திட்டம் ரூ.4,000 கோடியில் அரசு –தனியார் கூட்டாண்மை (பிபிபி) முறையில் செயல்படுத்தப்படும்.

20,000 சார்ஜிங் நிலையங்கள்... மின் விநியோகத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.1,543 கோடியில் 178 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணியை அரசு மேற்கொள்ளும். மேலும், ரூ.2,000 கோடியில் 40,000 பழைய விநியோக மின் மாற்றிகள் படிப்படியாக மாற்றப்படும். மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு– தனியார் கூட்டாண்மை முறையில் அடுத்த 5 ஆண்டுகளில் மின்சார வாகனங்களுக்கான 20,000 பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும். அடுக்குமாடி நலச் சங்கங்களின் மூலம் குடியிருப்புகளில் அமைக்கப்படும் மின் வாகன சார்ஜிங் நிலையங்களுக்கு அரசு மானியம் வழங்கும். இதற்காக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒரே நாளில் 1.54 அடி உயர்ந்தது மேட்டூர் அணை நீர்மட்டம்!

காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் புதன்கிழமை 74.55 அடியாக உயர்ந்த மேட்டூர் அணை.

மேட்டூர் / பென்னாகரம், ஆக. 5: கர்நாடக மாநிலம், கபினி அணையில் இருந்து திறக்கப்படும் உபரிநீரின் வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1.54 அடி உயர்ந்துள்ளது. காவிரியில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளத்தில் பெய்துவரும் தென்மேற்கு பருவமழையால் கபினி அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அணை முழுக் கொள்ளளவை எட்டியதால், கடந்த 1 ஆம் தேதி முதல் கபினி அணையில் இருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. இதன் காரணமாக காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கபினியின் உபரிநீர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் தமிழக–கர்நாடக எல்லையான அடிப்பாலாறு பகுதியை வந்தடைந்தது. பின்னர் இரவு 8 மணியளவில் மேட்டூர் அணையை சென்றடைந்தது. இதையடுத்து அணைக்கு செவ்வாய்க்கிழமை காலை 67 கனஅடியாக இருந்த நீர்வரத்து, இரவு 8 மணிக்கு 4,923 கனஅடியாக உயர்ந்தது. புதன்கிழமை காலை 11,988 கனஅடியாகவும், மாலை 4 மணி நிலவரப்படி 18,905 கனஅடியாகவும் அதிகரித்தது.

நீர்வரத்து அதிகரித்து வருவதால் செவ்வாய்க்கிழமை காலை 73.02 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம், புதன்கிழமை காலை 74.01 அடியாகவும், மாலை 74.55 அடியாகவும் உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 1.54 அடி உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்காக விநாடிக்கு 1,500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 36.74 டிஎம்சியாக உள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்ட உபரி நீர்வரத்து காரணமாக, ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து விநாடிக்கு 20,000 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அரசுப் பள்ளிகளில் தினமும் விளையாட்டுப் பாடவேளை

சென்னை, ஆக. 5: அரசுப் பள்ளிகளில் இனி தினந்தோறும் ஒரு மணிநேரம் விளையாட்டுப் பாடவேளை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு என்பது பள்ளிகளிலிருந்து தொடங்க வேண்டும். தற்போது அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் வாரத்துக்கு இரு விளையாட்டு பாடவேளைகள்தான் உள்ளன.

அதற்கு பதிலாக தினமும் ஒரு மணி நேரம் விளையாட்டுப் பாடவேளை செயல்படுத்தப்படும். அதற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வசதிகள் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அருகே உள்ள பகுதிகளில் விளையாட்டு வசதிகள், உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்படவுள்ளன.

கிராமிய விளையாட்டு: தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளை உலக அரங்குக்கு கொண்டு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதற்காக ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ் நிதியாண்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.1,051 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5 லட்சம் மாணவர்களுக்கு ஏஐ பயிற்சி

சென்னை, ஆக. 5: தமிழகத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 5 லட்சம் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (ஏஐ) திறன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுதொடர்பாக பட்ஜெட்டில் வெளியான அறிவிப்பு: டிஜிட்டல் யுகத்தில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில் வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதன் கீழ், ஐஐடி சென்னை உள்ளிட்ட உயர் கல்வி அமைப்புகளுடன் இணைந்து பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 5 லட்சம் இளைஞர்களுக்கு 2031–க்குள் செயற்கை நுண்ணறிவுத் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

வெற்றித் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் நிகழாண்டில் 12 லட்சம் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஒரு லட்சம் வேலையில்லா இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. முதல் கட்டமாக 20,000 இளைஞர்களுக்கு பணியிடப் பயிற்சி வழங்கப்படும். இதற்காக ரூ.150 கோடி ஒதுக்கப்படுகிறது.

ஐடிஐ–க்களில் ஏஐ: அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரவழிக் கற்றல் தொழிற்பிரிவுகள் தொடங்கப்பட உள்ளன. முதல்கட்டமாக 5 ஆண்டுகளில் 50 ஐடிஐ–க்களில் இந்த வசதிகள் அறிமுகப்படுத்தப்படும். மேலும், ரூ.90 கோடியில் 5 புதிய ஐடிஐ–க்கள் அமைக்கப்படும்.

மின்சார வாகனம் மற்றும் மின் கலன் பராமரிப்பு பயிற்சிகள் 22,500 பேருக்கு அடுத்த 5 ஆண்டுகளில் அளிக்கப்பட உள்ளது.

டிஎன் ஸ்பார்க்: செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் மற்றும் இணையக் கருவிகள் குறித்த அறிவுக்கான பள்ளிக் கல்வித் திட்டம் (டிஎன் ஸ்பார்க்) தற்போது 5,000 பள்ளிகளில் உள்ளது. அவை மேலும் 2,600 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda இந்தியாவின் பன்னாட்டு வங்கி | 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை)
2வது தளம், எண்.82, பேங்க் ரோடு, கோயம்புத்தூர் – 641 018
போன் : 0422 2302423, 2302324. மின்னஞ்சல் : sarcoi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/அடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன்தாரர்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.	**M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள், K.K.KACHARES, V.K.பாளையம், சுரடிவாவி (வழி), புளியம்பட்டி கிராமம், பல்லடம் தாலுகா திருப்பூர் மாவட்டம் – 641 658. **திருமதி. P. காயத்திரி (M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸின் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** க/பெ இளங்கோவன், கதவு எண்.5/129, கணேஷ் கார்டன், காடம்பாடி, சூலூர், கோயம்புத்தூர் – 641 401. **திரு. M. ஜெகதீசன் (M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸின் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ மருதாசல மூர்த்தி, எண்.7/42–30, குமரன் நகர் பேஸ்–2 கிரணத்தம், சரவணம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் – 641 035. **திருமதி. K. பத்மாவதி (M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸின் பங்குதாரர், உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** க/பெ கந்தசாமி, கதவு எண்.82/4 (1B), சாமப்பா லேஅவுட் கெண்டையூர் கிராமம், மேட்டுப்பாளையம், மகாதேவபுரம், கோயம்புத்தூர் – 641 305.	**திருமதி. K.பத்மாவதியின் சொத்து.** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கதாசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் டவுன், கெண்டையூர் பட்டா எண்.531, சர்வே எண்.272/1ல் உள்ள 2.82 ஏக்கர், இதிலடங்கிய வடபுறப் பகுதியிலுள்ள 1.79 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, C எண்.2516/81 CNR 5L P/R (CN) 137/81 ல் லேஅவுட் அங்கீகாரம் பெற்றதில், அதிலுள்ள மனை எண்.11 ன் தென்புறப் பாதி பங்கு 1237 ½ சதுரடிக்கு எல்லைகள் விபரம் : மனை எண்.12 க்கு வடக்கு, A பிலோமினாவுக்குச் சொந்தமான மனை எண்.11 ன் வடபுற பாதி பங்கிற்குத் தெற்கு, லேஅவுட் பிளானின்படியான 30 அடி தென்வடல் ரோடுக்குக் கிழக்கு, மனை எண்.10 ல் உள்ள மாகாளியப்பனுக்குச் சொந்தமான வீட்டுக்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் வடபுறம் – 41 ½ அடி, கிழமேல் தென்புறம் – 41 அடி, தென்வடல் மேற்புறம் – 30 அடி, தென்வடல் கிழபுறம் – 30 அடி, இந்த அளவுகளுள்ள மொத்தம் 1237 ½ சதுரடி நிலம், காலி நிலம் மற்றும் லேஅவுட்டின் ரோடுகளின் வழியே சொத்திற்குச் சென்றுவரும் வழித்தட உரிமைகளுடன் மற்றும் அங்குள்ள அனைத்துப் பிற பாத்தியதைகளுடன். அதில் கட்டப்பட்ட கதவு எண்.82/4 (1B), கதவுகள், சன்னல்கள், நிலவுகள், மின்சார சர்வீஸ் இணைப்பு குடிநீர் இணைப்பு முதலியன. கதவு எண்.82/4 (1B), சொத்து வரி விதிப்பு எண்.14515, குடிநீர் இணைப்பு எண்.6799, மின்சார சர்வீஸ் இணைப்பு எண்.153–006–445. இச்சொத்து மேட்டுப்பாளையம் டவுன் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு, மேட்டுப்பாளையம் டவுன், பழைய வார்டு எண்.13, புதிய வார்டு எண்.24, டவுன் சர்வே எண்.26, பிளாக் எண்.46 ல் அமைந்துள்ளது. சொத்தானது கந்தசாமி மனைவி திருமதி. K.பத்மாவதிக்குச் சொந்தமானது. **அட்சரேகை : 11.297842 தீர்க்கரேகை : 76.928369**	அனைத்து கடன் வசதிகளுக்குமான நிலுவைத் தொகை : 31.07.2026 தேதியன்று, ரூ.1,45,61,370/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஐந்து லட்சத்து அறுபத்து ஓராயிரத்து முன்னூற்று எழுபது மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	25.08.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.35,00,000/– 2. ரூ.3,50,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	24.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
2.	**திரு.S.அருண்குமார்,** த/பெ S.P. சுகுமார், பார்சன் செஷ் நெஸ்லே, ஹால்மார்க் அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் எண்.3, ஃப்ளாட் எண்.5, நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயம்புத்தூர் – 641 036. **திரு. S.P. சுகுமார்,** பார்சன் செஷ் நெஸ்லே, ஹால்மார்க் அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் எண்.3, ஃப்ளாட் எண்.5, நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயம்புத்தூர் – 641 036.	**திரு.S.அருண்குமாரின் சொத்து. அட்டவணை A :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மதுக்கரை சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, மதுக்கரை கிராமம், பட்டா எண்.422, சர்வேக் கள எண்.1004/25, இதில் மொத்தமுள்ள 2.79 ஏக்கரில், வடகிழக்குப் பகுதி 0.96 ¼ ஏக்கர் அமைந்த எல்லைகள் விபரம் : தனபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான சர்வே எண்.1004/2 ல் உள்ள 0.80 ¾ ஏக்கர் நிலச் சொத்துக்கு வடக்கு, சர்வே எண்.997 ல் உள்ள நிலங்களுக்குத் தெற்கு, சர்வே எண்.1004/3 A ல் அமைந்த நிலச் சொத்துக்கு மேற்கு, சர்வே எண்.1004/2 ல் உள்ள தனபாலிற்குச் சொந்தமான நிலத்துக்கு மற்றும் தனபாலால் விடப்பட்ட 30 அடி அகல வண்டித் தடத்துக்குக் கிழக்கு. அதனோடான வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் மேற்சொன்ன சர்வேக் களத்தில் மேற்புற பகுதியிலுள்ள, தனபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்துப் பகுதியின் வழியே செல்லும் 30 அடி அகல வண்டித் தடத்தில் உரிமை மற்றும் அங்குள்ள பிற பாத்தியதைகளுடன். இச்சொத்து சர்வே எண்.1004/2 B ல் மதுக்கரை பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது. **அட்டவணை B :** மொத்தமுள்ள அட்டவணை A சொத்தில் 291.05 சதுரடி பிரிபடாத பங்கு நிலம். **அட்டவணை C :** "சாய்தான் என்கிளேவ்" என்றழைக்கப்படுகிற கட்டிடத்தின், B பிளாக்கில், அபார்ட்மெண்டின் முதல் தளத்திலுள்ள மொத்தம் 658.79 சதுரடி சிறப்புக் கட்டுமானப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். B1–1, பொதுப் பகுதிகளில் உரிமை மற்றும் ஒரு வாகன நிறுத்துமிடத்துடன். **அட்சரேகை : 10.930538 தீர்க்கரேகை : 76.928076**	நிலுவைத் தொகை : 31.07.2026 தேதியன்று, ரூ.40,06,005/– (ரூபாய் நாற்பது லட்சத்து ஆறாயிரத்து ஐந்து மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	25.08.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.26,00,000/– 2. ரூ.2,60,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	24.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
3.	1. **திரு.அருள்நாதன்.I (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்),** த/பெ இன்னாசிமுத்து, கதவு எண்.25A, மனை எண்.25, தெற்கு பகுதி, சென்னியாண்டவர் நகர், KPR மில்ஸ் ரோடு, புதிய மின் கட்டமைப்பு கருமத்தம்பட்டி, சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் – 641 659.	**திரு. I.அருள்நாதனின் சொத்து.** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் சார் பதிவு மாவட்டம், சூலூர் தாலுகா, கருமத்தம்பட்டி கிராமம், பட்டா எண்.234, சர்வே எண்.749, இதிலமைந்த 1.96.5 புஞ்சை ஹெக்டேர் தாம் ரூ.5.44 நிலம், இதிலடங்கிய 2.37 புஞ்சை ஏக்கர் நிலம், உட்பிரிவின்படி சர்வே எண்.749/1A1Aல் அமைந்த நிலம், 'சென்னியாண்டவர் நகர்' என்கிற பெயரில் வீட்டு மனைகளின் லேஅவுட்டாக மாற்றப்பட்டு, கருமத்தம்பட்டி பஞ்சாயத்திடமிருந்து 24.08.2022 தேதிய ந.க.எண்.582/2022/E ல் முறைப்படுத்துதலானதில், லேஅவுட்டிலடங்கிய மனை எண்.25 ன் தென்புற போர்ஷனுக்கு **எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் :** கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, 23 அடி அகல தென்வடல் லேஅவுட் ரோட்டுக்குக் கிழக்கு, மனை எண்.25 ன் மீதமுள்ள போர்ஷனுக்குத் தெற்கு, மனை எண்.24 க்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், **அளவுகளாக,** கிழமேல் வடபுறம் – 41.375 அடி, கிழமேல் தென்புறம் – 41¼ அடி, தென்வடல் இருபுறமும் – 26¼ அடி, இந்த அளவுகளுள்ள மொத்தம் 1084 சதுரடி அல்லது 100.707 சதுர மீட்டர் நிலம். **அட்சரேகை : 11.07419 தீர்க்கரேகை : 77.11288**	நிலுவைத் தொகை : 31.07.2026 தேதியன்று, ரூ.31,80,184/– (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து எண்பதாயிரத்து நூற்று எண்பத்து நான்கு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	25.08.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.40,00,000/– 2. ரூ.4,00,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	24.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
4.	**M/s. இன்னோவ் இம்பெக்ஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் திரு. P. பிரபு மற்றும் திரு. கார்த்திக், எண்.7/1, புத்தூரான் தோட்டம், சாமுண்டிபுரம், திருப்பூர் – 641 603. **திரு. P. பிரபு (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. திரு. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607. **திரு. P. கார்த்திக் (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. திரு. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607. **திரு. P. பழனிசாமி (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்) (காலஞ்சென்றவர்) திருமதி. பூங்கொடி, க/பெ. திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர், திரு. கார்த்திக், த/பெ. திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர், திரு. பிரபு, த/பெ. திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607.	**திரு. P. பிரபு மற்றும் திரு. P. கார்த்திக் (பங்குதாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள்) ஆகியோரின் சொத்து.** திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா, தற்போது திருப்பூர் வடக்கு தாலுகா, தொட்டிபாளையம் கிராமம், பொது சர்வே எண்.203/2 ல் உள்ள 1.13 ஏக்கர் தீர்வை ரூ.1.55, இதில் விற்பனையாளர்கள் குமாரசாமி மற்றும் அப்பாசாமி ஆகியோரால் தடத்திற்கென்று நிலங்கள் விடப்பட்டது கழிபட்டதில், மீதமுள்ள 0.93 ஏக்கர் நிலத்தின் எல்லைகள் விபரம் : 37 லிங்குகள் கிழமேல் தடத்துக்குத் தெற்கு, நல்லாறு புறம்போக்கிற்கு வடக்கு, 37 லிங்குகள் தென்வடல் தடத்துக்குக் கிழக்கு, பொது சர்வே எண்.203/3 ல் உள்ள நிலங்களுக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள மேற்குறிப்பிட்ட நிலம் 0.93 ஏக்கர் முழுமையும், 37 லிங்குகள் கிழமேல் மற்றும் தென்வடல் தடத்தில் வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் மேற்குறிப்பிட்ட நிலங்களுக்குண்டான வழக்கமான வழித்தடத்தில் மற்றும் வண்டித்தடத்தில் உபயோக உரிமைகளுடன் மற்றும் அனைத்து வசதிகளில் உரிமைகளுடன். **அட்சரேகை : 11.140316 தீர்க்கரேகை : 77.363263**	நிலுவைத் தொகை : 31.07.2026 தேதியன்று, ரூ.1,29,87,116/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஒன்பது லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து நூற்று பதினாறு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	25.08.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.2,79,00,000/– 2. ரூ.27,90,000/– 3. ரூ.1,00,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	24.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** இணையதளம் 'லிங்க்'கில் மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** –ல் பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் : 9538993885** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 04.08.2026
இடம் : கோயம்புத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா

DINAMANI, Coimbatore Phone: 2317853; Fax: 0422-2311320 RNI Reg. No. 53675/91. Printed and Published by **N. Gopalan** on behalf of Express Publications (Madurai) Private Ltd., at Express Press, Old No.152 / New No.110, Pankaja Mill Road, Coimbatore - 641 045. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - **Editor: K.Vaidiyanathan** Coimbatore. Vol. **37**, No. **217**
COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.